**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 368/2018**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.04.2026 | | |
| பெயர்: | பழனிவேல்<br>(DW1– Cross ) | தகப்பனார் பெயர்: | சிவானந்தம் |
| கிராமம்: | சந்தப்படுகை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | இரயில்வே பணி | வயது : | 47/2026 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :15.04.2026**

**(ஆரம்பித்த நேரம்–12.34)**

1. வாதி சொத்தின் வசம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து 120 குழி ஆகும். தாவா சொத்து எங்களுக்கு சொந்தம் என்று கட்சி செய்து வருகிறோம். தாவா சொத்து பீமன்ராவ்க்கு சொந்தமானது என்று நான் எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். பீமன்ராவ்க்கு எந்த காலத்திலும் தாவா சொத்து சொந்தமாக இருந்ததில்லை. பீமன்ராவ்க்கு வாரிசுகள் யார் யாரென்று எனக்கு தெரியாது. பீமன்ராவின் மகனிடம் சொத்து இருந்தது என்று எனது எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான்.

2. ராகவேந்திரராவ் யார் என்று எனக்கு தெரியும். அவர் எந்த வருடம் காலமானர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராகவேந்திரராவ்க்கு வாரிசுகள் யார் யாரென்று எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை நரசிங்கராவ் மனைவி கங்காபாயிடமிருந்து குத்தகைக்கு வாங்கினோம். தாவா சொத்திற்கான குத்தகை ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1

ஆவணத்தில் மூன்று அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாவானது நரசிங்கராவ், நந்தகுமாரன், கோகிலாம்பாள் ஆகிய மூவரின் பேரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணமான பட்டா மாறுதல் உத்தரவில் கங்காபாய் பெயரில் 0.16 ஏர்ஸ் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர எனக்கு சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ எந்த நிலமும் இல்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை தவிர எனது தாயார் செல்வநாயகியின் பெயரிலும் சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ எந்த நிலமும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ தாவா சொத்திற்கு குத்தகை எவ்வளவு என்பது பற்றி நான் கூறவில்லை என்றால் சரிதான். குத்தகையானது பணமா அல்லது பொருளா என்பது பற்றி எதிர்வழக்குரையிலும் அல்லது முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

5. குத்தகை ஏற்பாடு ஆவணப்பூர்வமாக ஏற்படவில்லை என்றால் சரிதான். பெருந்தோட்டம் கிராமத்தில் உள்ள பரமசிவம் என்பவர் பெயரில் கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்காக பி.வா.சா.ஆ.6 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாளது தேதிவரையில் நான் கங்காபாய்க்கு குத்தகை செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை. 2000ம் வருடத்தில் குத்தகைக்கு ஒப்புக்கொண்டும், கடந்த 2019ம் வருடம் குத்தகை நிலத்தை கங்காபாயிடம் ஒப்படைத்துவிட்டோம் என்றால் சரிதான்.

6. தாவா சொத்து பரமசிவத்திற்கு உரிமையானது என்று எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் மின்மோட்டார் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் தாவா சொத்தில் போர்வெல் பூமியில் இறக்கி மோட்டார் வைத்து சாகுபடி செய்வதாக கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் தற்போது நெல், உளுந்து, பயிர் சாகுபடி பரமசிவம் செய்து வருகிறார். ஆனால் நான் செய்யவில்லை. எனது முதல் விசாரணையில் தாவா சொத்து பரமசிவம் வசத்தில் இருந்ததாகவும், அவர் தான் சாகுபடி செய்து வருவதாகவும் கூறவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும், சாகுபடியிலும் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. என் வசமோ அல்லது பரமசிவம் வசமோ அனுபவத்தில் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதியான எனது தாயாரும் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.58)**